# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## O.S.No.126/2019

சாட்சி : DW– 2
பெயர் : திரு. சக்திவேல் தேதி : 22.04.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– ( வாதி தரப்பில்)

வாதி எனது அத்தை மகள் ஆவார். இவ்வழக்கில் அவர் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்பது எனக்கு தெரியும். முத்துகவுண்டருக்கு சேப்பெருமாள் கவுண்டர், ஆனைகவுண்டர், வெள்ளையம்மாள், அழகம்மாள், மாரிமுத்து ஆகியோர்கள் பிள்ளைகள் ஆவார்கள். இவ்வழக்கு வாதி பூவி மேற்படி வெள்ளையம்மாளின் மகள் ஆவார். அழகம்மாள் அ.வ.எண்.400/2018 என்ற வழக்கை பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சமாதானமாக முடிக்கப்பட்டுவிட்டது. அ.வ.எண்.400/2018 வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரமும், இவ்வழக்கு சொத்து விவரமும் ஒரே சொத்து விவரம்தான் என்றால் சரிதான். இவ்வழக்கு வாதி பூவி மற்றும் 8 ம் பிரதிவாதி பூவாக்கவுண்டர், 9 ம் பிரதிவாதி ராஜேந்திரன் ஆகியோர்களுடன் நாங்கள் பாகப்பிரிவினை ஏதும் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். வாதி இவ்வழக்கில் கோரியுள்ளபடி நாங்கள் பாகப்பிரிவினை கொடுப்பதற்கு தயாராக உள்ளோமா என்றால் அவர் சொத்துகள் வேண்டாம் என்றும், சொத்துகளில் பாகம் வேண்டாம் என்றும் ஏற்கனவே சொல்லிவிட்டார். வாதி வழக்கு சொத்துகளில் பாகம் வேண்டாம் என்று சொன்னார் என்பதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். வாதி எப்போதும் வழக்கு சொத்துகளில் பாகம் வேண்டாம் எங்களிடம்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.22 15:20:17 +0530

I Additional District Judge,
Salem

சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.400/2018 வழக்கில் சமரசம் செய்யப்பட்டபோது வாதிக்கு வழக்கு சொத்துகளில் பாகம் கொடுப்பதாக நாங்கள் தெரிவித்துவிட்டு பின்னிட்டு பாகம் கொடுக்காத காரணத்தினால் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்ய நேர்ந்தது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் சட்டப்படி வாதிக்கு 1/15 பாக உரிமை உள்ளது என்றும், அதனை கேட்டுதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே வாதி வழக்கில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.04.22 15:20:22 +0530

I Additional District Judge,
Salem